1992 ஏப்ரல் 22]

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கா. ப. பட்டாபிராமன், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் ஏழாவது மற்றும் எட்டாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

3. சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்).

டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல். 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.